பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 121
இதழ்: 14
21—07—1995
விலை ரூபா 5·00

University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division
Library

## பாப்பரசரின் வேண்டுகோள்

வத்திக்கான் தூதுவருக்கு யாழ். ஆயர் அனுப்பிய கடிதத்தின் எதிரொலியாக, திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் புதன்கிழமை (12-07-95) அன்று கொடுத்த பொதுப் பேட்டியின்போது, நவாலி ஆலயத்தில் நடந்த படுகொலைகளுக்கு தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்ததுடன், இராணுவ நடவடிக்கையை நிறுத்தி, சமாதானத்திற்கான அமைதி வழிவகைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை ஆயர் பேரவை மூலம் சிறிலங்கா அரசை வேண்டிக்கொண்டார்.

❋ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ❋

### நவாலி கத்தோலிக்க ஆலயத்தில் தஞ்சம் புகுந்தோர் மீது

# கொடூர குண்டு பாய்ச்சல்

## 117 பேர் பலி — 200 க்குமேல் படுகாயம்

யாழ்ப்பாண குடாநாட்டு மக்களை விடுதலைப்புலிகளிடமிருந்து "விடுவிக்கும்" நோக்குடன் தொடங்கிய "முன்னோக்கிப் பாய்ச்சல்" எனும் சிறீலங்கா இராணுவ நடவடிக்கையின் முதல்நாள் (ஞாயிறு-09-07-95) மாலை 4·45 மணியளவில் சரமாரியான விமானக் குண்டு வீச்சினால் நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த அப்பாவி மக்களில், 65 பெண்கள், 13 குழந்தைகள் உட்பட, 117க்கு மேலானோர் கொல்லப்பட்டதுடன், 200 பேர் அளவில் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிப் போராளிகள் என்று அரசுச் செய்தித் தாபனங்கள் முதலில் அப்பட்டமான பொய்ப்பிரசாரம் செய்தது. இக் கொடூர சம்பவம் குறித்து விசாரணை ஒன்று நடத்துவதென்று ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட பொழுதிலும், சம்பவம் நடந்த இடத்திற்குப்போக முடியாதிருப்பதனால் விசாரணை மேற்கொள்ள முடியாதிருக்கிறதென வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் திங்கள் (16-07-95) அன்று கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். மேலும், யாழ் ஆயரதும், யாழ் குடாநாட்டிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரதும், யாழ் அரசாங்க அதிபரதும் இச் சம்பவம் குறித்த அறிக்கைகளை ஏற்றுக் கொள்ள அரசு தயக்கம் காட்டுகின்றது. சிறீலங்கா இராணுவத்திடம் சிக்கிக் கொள்ளாமல் தப்புவதற்காக (தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## "புலியின் பிடியிலிருந்து" விடுவிக்கப்பட்டோர் !!



சின்னா பின்னமான சடலங்கள் (நவாலி ஆலய வளாகத்தில்) சின்னஞ் சிறிய பாலகர் (படம்: நன்றி ஈழநாதம்)

## யாழ் ஆயர் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு 10-07-95 இல் எழுதிய கடிதம்

மேதகையீர்,

நவாலி புனித பேதுருவானவர் கத்தோலிக்க ஆலயத்தில் ஞாயிறு, யூலை 9 ஆம் நாள், ஏற்பட்ட பொது மக்கள் சாவும் சேதமும்.

பின்வரும் துக்ககரமான சம்பவத்தை உங்கள் அன்பார்ந்த கவனத்திற்குக் கொண்டுவர தயவாய் விடைதரவும்;

உங்களது பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் (தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## வத். தூதுவருக்கு யாழ் ஆயர் வேண்டுகோள்

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் சிறீலங்கா ஜனாதிபதிக்கு 10-07-1995 அன்று எழுதிய கடிதத்தின் பிரதியொன்றை கொழும்பிலுள்ள வத்திக்கான் தூதுவர் மேன்மைதங்கிய பேராயர் ஒஸ்வால்டோ படில்லா அவர்களுக்கும், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவருக்கும் அனுப்பியுள்ளதுடன் (தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## யாழ். கத். குருமாரின் கண்டனமும் கோரிக்கைகளும்

யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக் குழுவின் அழைப்பின் பேரில் யூலை 12ஆம் திகதி புதன்கிழமை, யாழ் ஆயர் இல்லத்தில் யாழ் மறைமாவட்ட குருமார் 68 பேர், ஆயர் தலைமையில் ஒன்று கூடி "முன்னோக்கிப் பாய்ச்சல்" எனும் இராணுவ நடவடிக்கை, விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு (தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## தென்னிந்திய திருச்சபை ஆயர் ஜெபநேசனின் அறிக்கை

கடந்த எட்டு ஆண்டுகளில் மிகக் கடுமையான தாக்குதல்களை இலங்கை இராணுவம் கடந்த ஞாயிறு அன்று (09-07-95) தொடங்கியதில், ஏறத்தாழ 350 ஆயிரம் அப்பாவிக் குடிமக்கள் கிழக்கு நோக்கிச் செல்ல ஆரம்பித்துள்ளனர் என்று தென்னிந்திய (தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## இலங்கை கத். ஆயர் பேரவை கண்டனம்

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர் மேதகு வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை, இராணுவ நடவடிக்கையினால் நவாலி ஆலயத்தில் ஏற்பட்ட கொலைகளை வன்மையாகக் கண்டித்து (தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## ஆழ்ந்த கவலை தெரிவிக்கும் திருமலை - மட்டுநகர் ஆயர்

"முன்னோக்கிப்பாய்ச்சல்" எனும் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் யாழ் மக்களுக்கு விளைந்த இழப்புக்களையும் இன்னல்களையும் அறிந்து அதிர்ச்சியுற்றதாகவும், பாதிக்கப் பட்டோருக்கும் அவர்களின் (தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எம்கருத்து

## ஒரு பயங்கர வாரம்

''இது இனப்பிரச்சனை அல்ல; இது ஒரு பயங்கர வாதப் பிரச்சனையே!'' என்று இலங்கைத் தீவில் கடந்த பல வருடங்களாக இடம்பெற்ற போராட்டம் பற்றி ஓயாது நா கூசாமல் அரசியல்வாதிகள் முன்னர் கூறியதை நாம் காது புளிக்கக் கேட்டோம். அண்மையில், ''இது ஓர் இனப்பிரச்சனையே'' என்று ஒப்புக்கொண்ட பின்னரும், இன்றைய அரசியல் தலைவர்கள் தமிழர்களின் உரிமைப் போராட்டம் புரிபவர்களை திரும்பவும் ''பயங்கரவாதிகள்'' என்று பெயர் சூட்டித் தம் அரசியல் பலத்தைத் திடப்படுத்தச் சித்தம் கொண்டுள்ளனர்.

பிரச்சனை எதுவாயினும், அதைத் தீர்க்க தமது முடிவை ஓர் இனத்தின்மேல் அழுத்தி அமுலாக்க ''சாத்தானின் உதவி பெற்றாகிலும் செயற்படுவோம்'' என்று சூளுரைத்தனர் முன்னாள் அரசியல் தலைவர்கள்.

''வானத்தினின்று மின்னலைப் போல் சாத்தான் விழக்கண்டேன்'' (லூக். 10:18). யாழ் குடாநாட்டில் பயங்கர வாரம் தொடங்கியது. சாத்தானின் வல்லமை கட்டவிழ்த்ததுபோல, இன்று சிறீலங்கா அரசாங்கத்தின் முப்படைகள் நடாத்தும் போரின் எறிகணைத் தாக்குதல்களினாலும், விமானக் குண்டு வீச்சுகளினாலும், கடற்படைப் பீரங்கி வேட்டுக்களினாலும் யாழ் குடாநாட்டு மக்கள் சாவின் பிடியில் சிக்குண்டுள்ளனர். இது பயங்கரவாதம் இல்லையா?

''முன்னோக்கிப் பாய்ச்சல்'' எனும் பெயரில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் முதல் நாளே 'சாத்தானின் சீற்றம்' பரவலாகக் குடிமனைகள் மீதும், குறிப்பாக நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தில் சரணடைந்த பெருந்திரளான இடம்பெயர்ந்த மக்கள் கூட்டத்தின் மேலும் சீறிப் பாய்ந்தது. அன்று பிற்பகல், பட்டப் பகலில் கோயில் வளாகத்தில் அரச படையினரின் போர் விமானத்திலிருந்து கண்மூடித்தனமாக சரமாரியாகப் பொழிந்த குண்டுகளினால் ஏற்பட்ட நூற்றுக்கு மேலான மனித சாவுகளையும், மிகவும் மோசமாகக் காயப்பட்ட பல நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களின் அங்கவீனமான அவல நிலையையும் கண்டும் கேட்டும் கவலை தெரிவிக்காதவர்களில் சிறீலங்கா அரசும் அதன் பொம்மை ஆட்சியின் ஊக்குவிப்பாளரும் தவிர வேறெவரும் அடங்கவில்லையென்பது யாவரும் அறிந்ததே.

அடர்த்தியான குடிமனைகள் மீது நடத்தப்படும் அடாவடித்தனமான இராணுவ நடவடிக்கைகளினால் உண்டாகும் அவலங்களின் உண்மைகளை இருட்டடிக்க முயலும் சிறீலங்கா அரசின் சமூக தொடர்பு சாதனங்களின் முயற்சிகள் இக்கொடூர சம்பவத்திற்காகிலும் விதிவிலக்கு வழங்கவில்லை. எனினும், மக்களிடமிருந்து மூடி மறைக்கும் இம் முயற்சி யாழ் கத்தோலிக்க ஆயரினதும், யாழ் நகரிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரதும் துரித முயற்சிகளினால் முறியடிக்கப்பட்டு, உலகிற்கு இதன் உண்மை ஓரளவாகிலும் பகிரங்கப்படுத்தப்பட்டது பாராட்டுக்குரியதாகும்.

உண்மைகளைக் கூற முன்வராவிடினும், உண்மையை எடுத்துக் கூறுபவர்களைத் தடுக்கும் அநாகரிகச் செயல் மிகவும் கண்டனத்துக்குரியதொன்றாகும். அத்துடன் உண்மைகளை அறிய மக்களுக்கிருக்கும் உரிமைகளையும், சில வாய்ப்புகளையும் கெடுப்பவர்கள் சர்வதேச தண்டனைக்குரியவராவர். இவ்வரிசையில், சில பொய்ப்பிரசாரர்களினால் உண்மைகளை மறைக்க தற்பொழுது கையாளப்படும் யுத்திகளில் ஒன்று, வானொலி ஒலிபரப்பின் அலைவரிசையை முடக்கி, 'ஜாம்' பண்ணும் பண்பற்ற செயல். 'புலிகளின் குரல்' மூலமாகவும், பி. பி. சியிலிருந்து முழங்கும் 'தமிழோசை' வழியாகவும் உண்மைச் செய்திகளை யாழ் மக்கள் அறியும் வாய்ப்பை மறுக்க ஒரு சிலர் எடுக்கும் குழப்பல் முயற்சிகளை நாம் வன்மையாகக் கண்டிக்காதிருக்க முடியாது. இதனை உடனடியாக நிறுத்துமாறு கோரி, சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது சமூகப் பொறுப்பாளர்களின் கடமையாகும்.

நீதி எனும் அடித்தளத்தில் உண்மை எனும் சாந்து கொண்டு கட்டி எழுப்படவேண்டிய நிலையான சமாதானத்திற்கு அயராது குரல் கொடுக்கும் அகில உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் 2ஆம் அருள் சின்னப்பர் தற்பொழுது நடக்கும் பயங்கர போரின் விளைவுகளை அறிந்து, சிறீலங்கா அரசுக்கு விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து, ஓர் இன ஒழிப்பை நோக்கிப் பாயும் போரை அரசு உடனடியாகக் கைவிட்டு, அமைதியான வழிமுறைகளைக் கை[illegible] நாட்டின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண [illegible] முன்வரவேண்டும்.

## திருத்தந்தையின் அப்போஸ்தலிக்க கடிதம்:

# 2000 யூபிலி ஆண்டு உடனடி ஆயத்தம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

(56) திருச்சபையானது 2000 ஆண்டுகளாக நிலைபெற்றுள்ளது. அது நற்செய்தியில் கூறப்படும் கடுகு மணியைப்போல், தனது கிளைகளால் மனுக்குலம் முழுவதற்கும் புகலிடம் அளிக்கக்கூடிய பாரிய விருட்சமாக வளர்ந்துள்ளது. (மத். 13 : 31 -32) 2ஆம் வத்திக்கான் சங்கம் திருச்சபை பற்றிய தனது கொள்கைத்திரட்டில் திருச்சபையில் அங்கத்துவம் பற்றியும், இறைமக்கள் கூட்டத்தில் சேருமாறு அனைத்து மக்களுக்குமுள்ள அழைப்பு பற்றியும் இவ்வாறு கூறியுள்ளது: ''இறைவனின் புதிய மக்கள் குலத்தில் சேர எல்லாமக்களும் அழைக்கப்பெறுகிறார்கள்.... இறைவனது அருளால் ஈடேற்றம் பெற அழைக்கப்பட்ட கத்தோலிக்க விசுவாசிகளும், கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளும் பிறரும், அனைத்துலக மக்களும் அதன் அங்கத்தவராக அல்லது பல்வேறு விதத்தில் அத்தோடுதொடர்புடையவர்களாக உள்ளனர்'' திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் திருச்சபை பற்றிய தமது சுற்றுமடலில் மனுக்குலம் முழுவதும் எவ்வாறு இறைதிட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ளது என்பதை விளக்கி மீட்பின் உரையாடலில் உள்ள பல்வேறு வட்டங்களை வலியுறுத்துகிறார்.

இந்த அணுகுமுறையைத் தொடர்ந்து, நற்செய்தியில் கூறப்படும் புளிப்புமா உவமையை (மத். 13 : 33) நாம் மேலும் தெளிவாக உணரமுடியும். ஒரு தெய்வீக புளிக்காரத்தைப்போல, கிறிஸ்துநாதர் எப்போதும், என்றென்றும் மனுக்குலத்தின் வாழ்வில் முழுமையாக ஊடுருவி, பாஸ்கா மறைபொருளில் நிறைவேற்றப்பட்ட மீட்பு வேலையை பரவச்செய்கிறார். எதிர்காலமும் அவருடையதே. ''இயேசுக்கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றுமேமாறாதவர்'' (எபி. 13 : 8) திருச்சபையோவெனில் ''ஒரே குறிக்கோளையே கொண்டுள்ளது. தேற்றுகிறவராகிய ஆவியானவர் காட்டும் வழியில் கிறிஸ்துவின் வேலையைத் தொடர்ந்து நடத்துவதே அக்குறிக்கோள். உண்மைக்குச் சாட்சியம் கூறவும், தீர்ப்பு அளிக்கவன்றி மீட்கவும், பணிவிடை பெறுவதற்கன்றி பணி[illegible] புரியவுமே கிறிஸ்து உலகிற்கு வந்தார் (இன். உல. திருச். 3)

(57) ஆகவே திருச்சபையின் பணி அப்போஸ்தலர் காலத்திலிருந்து மனுக்குலம் முழுவதிலும் இடையறாது, தொடர்ந்து வருகின்றது. மத்திய தரைக்கடல் பிரதேசத்திலேயே முதலில் இப்பணி சிறப்பாக இடம்பெற்றது. முதல் ஆயிரம் ஆண்டுகளில் ரோமாபுரியிலிருந்தும், கொண்ஸ்தாந்திநோப்பிளில் இருந்தும் புறப்பட்ட மறைபோதகர்களால் ஐரோப்பாக் கண்டம் முழுவதற்கும் கிறிஸ்தவ சமயம் கொண்டுவரப்பட்டது. அதேவேளையில் இந்தியா, சீனா வரையுள்ள ஆசியாவின் மத்திய பகுதிக்கும் அவர்கள் சென்றுள்ளனர். 15ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்டு அந்தப் பாரிய கண்டத்தின் வடக்கிலும் தெற்கிலும், நற்செய்திப்பணி ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்திலேயே சகாராவிற்குத் தெற்கிலுள்ள ஆபிரிக்கக் கரையோரப்பகுதிகள் கிறிஸ்துவின் ஒளியைப் பெற்றன. மறைபோதக நாடுகளின் பாதுகாவலரான புனித பிரான்ஸிஸ் சவேரியார் ஜப்பானை அடைந்தார். 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அன்று கிம் என்னும் பொதுநிலையினர் கொரியாவுக்கு கிறிஸ்தவமதத்தைக் கொண்டு வந்தார். இதே காலப்பகுதியில் இந்தோசீனா, ஆஸ்திரேலியா, பசுபிக் தீவுகள் ஆகிய இடங்களிலும் நற்செய்தி அறிவிக்கப்பட்டது.

19ஆம் நூற்றாண்டில் ஆபிரிக்க மக்களிடையே நற்செய்திப்பணி மிகுதியாக இடம் பெற்றது. இவை அனைத்தும் அளித்த பலன்கள் இன்றுவரை நிலைபெற்றுள்ளன. 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் மறைபரப்புப்பணிபற்றிய தீர்மானத் தொகுப்பில் இது பற்றிக் கூறப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் பின் மறைபரப்புப்பணி பற்றிய விடயம் ''மீட்பரின் பணி'' என்னும் சுற்றுமடலில் எடுத்தாளப்பட்டது. இந்நூற்றாண்டின் இறுதியில் மறைபரப்பு நாடுகளிலுள்ள பிரச்சினைகள் இங்கு கருத்திற் கொள்ளப்படுகின்றன. எதிர்காலத்திலும் திருச்சபை தொடர்ந்து மறைபரப்புப்பணி ஆற்றவேண்டும். உண்மையில், மறைபரப்புவது அதன் இயல்பு

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

### யார் இவர்?

இடம் பெயர்ந்தோர்க்கு இரங்குபவன்
இடர் சூழ்ந்தோர்க்கு இனியவன்
மனம் சோர்ந்தோரை மகிழ்விப்பவன்
சினம் கொள்வோரை சகிப்பவன்

— பேறுபெற்றோன்.

R. அதிதி

## மரபுகளும் மாற்றங்களும்

— என். சண்முகலிங்கன்

### 33. மக்கள் தொடர்புச் சாதனங்களின் செல்வாக்கு

1. குடும்பம், பள்ளிக்கூடம், நண்பர் குழாம் என நீளும் சமூகமயமாக்கற் கருவிகளிலே Mass Media எனப்படுகின்ற மக்கள் | வெகுஜன தொடர்பு சாதனங்களின் செல்வாக்கு இன்று பெரிதும் உணரப்படும்.

மாயத்திரை விரிவாய் சினிமா, தொலைக்காட்சி, நாடகம், சஞ்சிகை — நூல்களென குவியும் சாதனங்களிடை மூழ்கிப்போகும் தனியன், தனக்கான விழுமியங்களை, ஏன் மாதிரி (Model) களை கூட இன்று பெரும்பாலும் இந்த ஊடகங்களிலிருந்தே பெறுவதைக் காணமுடிகிறது.

2. இந்த ஊடகங்கள், யதார்த்த வாழ்வினோடு இசைந்தவையாய், சமூக வாழ்வின் மேம்பாட்டுக்கு உகந்தனவாய் அமையும்போது அவற்றிலே தோயும் தனியனுக்கும் உய்யும் வழி கிடைக்கும்.

அல்லாதபோது வெறும் பகற் கனவுகளும், யதார்த்தத்திற்கு ஒவ்வாத கற்பனை மிதப்புக்களுமே மிஞ்சுகின்றன.

சினிமா நாயக—நாயகி பாவங்கள், பாவனைகள் யதார்த்த வாழ்வில் எதிர்பார்க்கப்படும் போது ஏற்படும் இடறல்கள் தான் எத்தனை?

நல்லவேளை இப்போது இந்த மாயத்திரை இங்கு விலக்கப்பட்டது. எனினும் வேறு வேறு சாதனங்களிடை இத்தகு பிரதிமைகளின் தொடர்ச்சி நீளும் —

3. ஒரு பிள்ளைக்கு நாம் வாசிக்க கொடுக்கும் கதைப்புத்தகத்திலிருந்து, நாம் தரும் காட்சிகள் வரை கவனமான தேர்வு அவசியம், பொருத்தமான,, தனிமனித ஆளுமை வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும் உகந்த தொடர்புச் சாதனங்களைக் காண்பது, இன்றைய அவசிய—அவசர தேவைகளில் முதன்மையானது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் அரங்கம் 4

## இளமைக்கு ஓர் அழைப்பு

இதயத்தைத் தொடும் இரக்கமற்ற கொலைகள் உன் இளமைக்கு தரும் செய்தி என்ன?

துவண்டு வாடும் மனித உறவுடன் நீயும் சுருண்டு கிடக்காதே. பணித்தளம் இதுவே. பயந்து ஒதுங்கும் கோழையாகாதே, நம்பிக்கையூட்டும் இளைஞனாக மாறிச் செயற்படு.

''நீரே என் புகலிடம், நீரே என் அரண், என் இறைவா, நான் உம்மை நம்பி உள்ளேன்'' என்று சொல். உன் அருகில் துவளும் இதயங்களுக்கு ஆறுதல் கூறு, அவதியுறுவோருக்கு அன்பைப் பகிரு, நோயும் உன் சூழலைத் தேடிவரும்வரை காத்திராமல், கண்காணித்து தவிர்த்து உன்சூழலுக்கு காப்பரணாக மாறு, ஏனைய இளைஞர்களையும் இணைத்துக்கொள். முதியோர், சிறுவர் முனகலுக்குள் நீயும் சிக்கிவிடாது சூழலைச் சுத்தப்படுத்துவதுடன் நம்பிக்கைதரும் பணிகளில் ஒன்றிணைந்து செயற்படு, அழைப்பு உன்னைத் தேடி வரும் எனக் காத்திராதே. வீண் பொழுதுக்கு இது நேரமல்ல. விவேகமுடன் செயற்படு, முகாம்கள் என்று முடங்கிவிடாதே, இருக்குமிடத்தில் – நீ ஒரு கிறிஸ்து– அவனாக மாறு. அதற்கு சாட்சிபகர உன் சொல்லும், செயலும் பணியுமே இன்று இளமைக்கு அழைப்பு. ஏலாது என்று ஒதுங்காது ஏலுமானவரை முயற்சிசெய்.

★ அன்பின் யோசப்பாலா

## ஓ இளமையே!


இளைய சமுதாயமே நில்
ஆயிரம் தீபங்களை ஏற்றிவைக்கும்
ஞானச்சுடர் நீயாக வேண்டும்.
அதற்காக அன்பு அன்பு என்று
அங்கலாய்த்து ஏங்குகின்றாயல்லவா?
''அன்பு'' என்ற ஒப்பற்ற மலரை அடைய
பல முயற்சிகள் எடுக்கிறாயல்லவா?
பணம், பதவி, பட்டம் ஆணவம் என்ற
ஆயுதங்களால் அதை அடைய
முடியாது திண்டாடுகின்றாயல்லவா?
நீ கையாளும் முறை தவறு.
உன்னையே நீ புரிந்து இவ்வாயுதங்களை
தூர எறிந்து விட்டுச் சரணடைந்து விடு.
இதோ அந்த ஒப்பற்ற மலர்
உன் காலடியில் உண்டல்லவா?
சிந்தி — செயற்படு.

செ. தேவசிந்து
உடுவில்

## குறுக்கெழுத்துப் போட்டி தேடல் 2
### முடிவு திகதி — 04-08-95

கீறிட்ட இடங்களில் வரவேண்டிய சொற்களை 23-06-95 07-07-95 பாதுகாவலனில் கண்டுபிடியுங்கள்.

விடைகளை வேறுதாளில் எழுதுங்கள். பரிசு உண்டு



இடமிருந்து வலம்:

1. இளமையின் இனிமையை—யில் இணைந்த வாழ்க்கையில் சுவைத்துப்பார்.
4. — தன் உரிமைக்கும், உடமைக்கும் முழு உரிமையுடையவன் இறுதி எழுத்தை இழந்துவிட்டான்.
5. கடினமான இதயத்தை இப்படியும் அழைப்பர் (குழம்பியுள்ளது)
7. பாடமாக்குவதை இப்படியும் கூறுவர் (ஒரு எழுத்தை இழந்து குழம்பியுள்ளது)
8. நவரத்தினங்களில் ஒன்று குழம்பியுள்ளது.
9. ஆலயங்கள் மனித— தரிப்பிடங்கள்.

மேலிருந்து கீழ்

1. —ப் பெறவேண்டும் என்ற ஏக்கம் ஏழைக்கே உண்டாகின்றது.
2. வாழ்த்தும்போது உதாரணமாகக் குறிக்கப்படும் பரம் குழம்பியுள்ளது
3. —இவனும் குருமடத்தில் சேரலாம்.
4. [illegible] இப்படியும் அழைப்பர் இறுதி இரண்டு எழுத்துக்கள் குழம்பியுள்ளது.
6. ஆடைவகையில் ஒன்று குழம்பியுள்ளது.

## திருப்பம்

[நாடகம்]

பங்குபெறுவோர்:—
ஆன்– } இருநண்பிகள்
வினி– }
ரொணி—குருவானவர்
சுபா —ஒரு இளைஞன்

வினி : ஆன், இண்டைக்கு எங்கட பாதர் எனக்கு மேல் வேலையைக் கட்டி விடப் பார்த்தார். நான் பாட்டுக் காரர்மேல் அந்தவேலையை சுமத்திவிட்டன். எப்படி என்ர ஐடியா?

ஆன் : இது ஒரு நல்ல ஐடியாவா? பொது வேலையை நாம் தானே செய்ய வேண்டும். இண்டைக்கு பள்ளிக்கூடம் இல்லைத்தானே! வா நாங்கள் போய் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்வோம்.

வினி : அந்த வேலையைப் பார்க்க அவர்கள் எல்லோரும் போதும். நீ ஏன் அங்க போய் கஷ்டப்படவேண்டும்? வா இண்டைக்கு வீரகேசரிப் பேப்பர் லைப்ரரியில் வந்திருக்கு, எனக்கு சினிமா பகுதிதான் விருப்பம் தெரியா வா அங்கபோவம்.

சுபா : வினி, வினி உன்ர தம்பி கோயிலில் பந்துவிளையாடும்போது அடிபட்டு கீழே விழுந்து காயம். உன்ர தம்பியை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போட்டினம்.

வினி : ஆன், வாடி தம்பிக்கு ஒன்றென்றால் என்னால் தாங்கமுடியாது. கடவுளே!

ஆன் : அந்த வேலையை பார்க்க அங்க இருக்கிறவர்கள் போதும். நீ வா வீரகேசரி பார்ப்போம்.

வினி : என்ன ஆன், உனக்கென்ன கல்மனமா? அடிபட்டது என் தம்பி, என்ர துன்பத்தில் பங்கு கொள்ளாத உன்னை என் நண்பியாக ஏற்றுக் கொள்ளவே எனக்கு வெட்கமாய் இருக்குது.

ஆன் : என்ன வினி! நானும் உன்ர நண்பி என்றதால் தான். உன்னைப்போல் எனக்கும் கல் மனம்.

வினி : கல்மனமா எனக்கா! சுபா நீ சொல்லு, எனக்கு கல்மனமாம். இவள் சொல்கிறாள். உதவிக்குக் கேட்க, மாட்டேன் என்றும்சொல்லி விட்டு என்னைக் கல்மனம் அது இது என்கிறாள்.

சுபா : ஆம் வினி, உம் மனம் கல்தான். முதலில் கோயிலில் வேலை செய்ய வருமாறு ஆன் கேட்டபோது நீர் சொன்ன பதில் நினைவிருக்கா?

ரொணி : என்ன? பிரச்சனையெல்லாம் தீர்ந்துவிட்டதா? என்ன வினியின் கண்ணில் நீர். ஓ மனமாற்றமா?

வினி : என்னை மன்னித்து விடுங்கள் பாதர். நான் செய்ததுதான் பிழை. ஆன் என்னை மன்னித்துவிடு.

ரொணி : வினி யாரும் உன்னை மன்னிக்க வேண்டியதில்லை, நீ அழுத அந்தக் கண்ணீரே உன் இந்த சிறிய பாவத்திற்கு ஈடுகட்டிவிட்டது.

சுபா : எல்லோரும் கதைத்துக் கொண்டு இருக்கிறம். வினியின் தம்பிக்கு என்ன மாதிரியோ?...

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்

★ ம. லூட்ஸ் வினிதா
பருத்தித்துறை

## மசனெட் ஆண்டு

அன்புடையீர்!

இயேசுவிடம் 'சரணடைந்த இளைய பிரபு' அங்கம் 2ஐ வாசித்த பின் பிரான்சின் நாடித்துடிப்பு ஏன் வேகமாக துடித்ததென அறிய நீங்களும் துடித்துக்கொண்டிருக்கிறீர்களா?

அதைவிட கடந்தவாரம் ஆரம்பித்த ''முன்னேறிப் பாயும்'' இராணுவநடவடிக்கையினால் துடியாய்த் துடித்திருப்பீர்கள். உங்களுடைய துடிதுடிப்புக்கள், இழப்புக்கள், உணர்வுகளில் உங்களுடன் ஒன்றிக்கின்றோம்.

அ. ம. தி. கள் அமுதத்தில் நீங்கள் சுவைக்கும் ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், அபிப்பிராயங்களை எங்களுக்கு எழுதுங்கள். இப்பகுதி வளர்ச்சிக்காக நீங்கள் எழுதும் உங்கள் பயனுள்ள கருத்துகளை, விமர்சனங்களை நீங்கள் விரும்பினால் பிரசுரிக்கின்றோம். நீங்கள் உங்கள் கருத்துக்களை எழுத வேண்டிய முகவரி:- ''அ.ம.தி.கள் அமுதம்''
தொடர்பகம்
657 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இதோ இயேசுவிடம் சரணடைந்த இளைய பிரபு அங்கம் 2ஐ சுவைத்து மகிழுங்கள்.

அ. பி. லொசிங்ரன், அ. ம. தி.

## 2 | சேரிப் பிரபு

இயூஜீன் நான்கு வயதிலே புறொவன்சாலின் மொழியைக் கற்றுக்கொண்டார், அவரிடம் பிரபுக் குண இயல்புகள் இயல்பாகவே முகிழத் தொடங்கின.

அதிகாரமும் ஆணவமும் அடக்குமுறையும் சிறு வயதில் இருந்ததற்கு ஒரு காட்சி: இயூஜீன் அப்பா அம்மா தங்கையுடன் தியேட்டருக்குச் சென்றிருந்த போது கீழிருந்து சத்தம் காதைக் கிழித்தது. பொறுமை இழந்த சின்னப்பிரபு சினங் கொண்டு சீறியெழுந்து '' ஏய் கவனம். நான் அங்கே வந்தேனென்றால்......'' என்று அதிகாரத் தொனியில் அலறினார்.

'' தனக்கு வேண்டியவற்றை அழுது கேட்க மாட்டான், அடம்பிடித்து அடைந்து விடுவான்,'' இது தாய் வழிக் குணம் என தாய்வழிப்பாட்டனார் சொல்வதுண்டு.

சின்னப்பிரபுவின் இரும்பான இதயத்தில் இரக்கப் பண்பும் இணைந்தே இருந்தது. அதற்கு ஒரு சம்பவம்!-

வீதியோரத்தில் நிலக்கரி அள்ளிச் செல்லும் அழுக்கு நிறைந்த சேரிக் குழந்தையின் ஏழ்மைக் கோலத்தைக் கண்டு உள்ளம் உருகி கண் கலங்கி தன் உடையை அவனுக்களித்து, அவனின் அழுக்கு உடையை தான் உடுத்திக் கொண்டார்.

இச்செய்தியறிந்த அன்னையவள் '' நீ ஒரு பிரபுவின் மகன். சேரிப்பையன் மாதிரி நீ உடுத்தக் கூடாது'' என அதட்டினாள், சின்னப் பிரபு சிறிது நேரம் அசையாது நின்றார். அடுத்த கணம் ''ரொம்ப நல்லது. அப்படியானால் நான் ஒரு சேரிப் பிரபுவாக இருப்பேன்' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் உறுவோர் பேறு பெற்றோர்



## சுமக்க முடியுமா?

செல்வி M. M. அல்பிரட்

மானிட வாழ்விலே மனித ஜென்மம் அனைத்தும் ஏங்கி ஏங்கி வாழ்நாளைச் செலவழிப்பது இன்பம் என்ற ஒரு சொல்லுக்காக. இந்த இன்பம் என்றால் என்ன? அது எங்கிருந்து கிடைக்கும்? எப்படிப் பெறமுடியும்? பெறும் வழிகள் தான் என்ன? இவற்றிற்கு விடை யாரால் கண்டு பிடிக்க முடியும்? எம்மில் பலர் பணம் பொருள், அளவுக்கு மீறிய சொத்து இருந்து விட்டால் அதுதான் இன்பம் என்று நினைத்து அதை எப்படியும் அடைந்துவிடத் துடிக்கிறார்கள். அதற்காக அவர்கள் மனச்சான்றுக்கு விரோதமான செயல்களில் ஈடுபடுவதோடு அடுத்தவர்களைத் துன்பப் படுத்துகிறார்கள் என்று கூறுவதை விட வதைக்கிறார்கள் என்று கூறலாம். இது தான் இன்பம் என்றால் இந்த இன்பம் எமக்குத் தேவையா?

வாழ்க்கை என்றால் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது தான். இது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகக் கருதப்பட்ட போதிலும் இன்பத்தை ஏற்றுக் கொள்ளுமளவுக்குத் துன்பத்தை ஏற்க எல்லோரும் மறுக்கின்றார்களே! ஏன்? அது கசப்பானது, கொடுமையானது. வாழ்க்கையையே பாழாக்கிவிடும் என்று அதற்கு அர்த்தமும்கற்பிக்கின்றார்கள். இங்கு தான் மானிடம் பாரிய தவறையே இழைக்கின்றது. எந்த இலக்கையும் சுலபமான வழியாலேயே அடையத் துடிக்கின்றது மனித இனம்.

துன்பம், துயரம் அது வேண்டவே வேண்டாம். அது நம்முடைய வாழ்க்கையின் இறுதி விளிம்பில் நம்மைக் கொண்டு சென்று விடும் என்பது தான் நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஆழப்பதிந்துள்ள விடயம். மாறாக நாம் நமக்கு வரும் துன்ப துயரத்தை நல் மனதுடன் ஏற்று அனுபவித்துப் பார்த்தால் முடிவில் கிடைக்கும் இன்பம் தான் நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மறுக்க, மறக்க முடியாத இன்பமாகும். இதை ஏற்றுக்கொள்வது மிகக் கடினமான விடயமாயிருக்கலாம்; ஆனால் இது தான் உண்மை,

மனிதனாகப் பிறந்துள்ள ஒவ்வொருவருடைய தன்மையையும், இயல்பையும் இறைவன் நன்கறிவார், ஆகவே ஒவ்வொரு மனிதனுக்கும் அவனால் சுமக்கக்கூடிய தாங்கிக் கொள்ளக்கூடிய சுமையைத் தான் இறைவன் தருகின்றார், அதை ஏன் நாம் மனமுவந்து ஏற்க மறுக்கின்றோம்? துயரைக் கண்டவுடன் இறைவனின் கண், காது, மூக்கை தேடுகின்றோமே தவிர ஏற்றுக் கொள்ளத் துணிகின்றோமில்லை. நெருப்பிலே போடப்படும் பொன்தான் ஒளிரும். மினிரும். அதே போன்று மனித வாழ்க்கையில் வரும் துயரம் அவனைப் புடமிடுகின்றது. அவனை ஆழ்ந்த அனுபவசாலி சாலியாகப், பொறுமை சாலியாக, ஏனையவருக்கு முன் மாதிரிகையானவனாக மாற்றி விடுகின்றது.

கனிதரும் கிளைகள் மிகுந்த கனிதரும் பொருட்டு வெட்டப் படுகின்றன. பொறுமைக்கு இலக்கணமான பூமித் தாயைக் கலப்பையால் கிளறி உழுது நெல் விளைவிக்கப்படுகிறது, அதிக பயன்பெறும்பொருட்டு. அன்று கிறிஸ்து மானிட மீட்புக்காகத் தான் தனி ஒருவராக நின்று சிலுவை சுமந்தார். நம் ஒவ்வொருவருடைய மீட்பு மட்டுந்தான் அவர் கண் முன் நின்றபடியால். அவர் நமக்காகச் சிலுவையைச் சுமக்க மறுத்திருந்தால் மீட்பு என்ற ஒன்றை மனித இனம் சுவைக்க முடியாமல் இருந்திருக்கும். அதே வேளை மனித இனத்துக்கு மீட்புப் பெற்றுக் கொடுத்த இன்பத்தினை பேற்றினை அடைந்திருக்கமாட்டார் கிறிஸ்து.

நெப்போலியன் ஏழு முறை தோற்றுப் பின்னர் வென்றான். அவன் முதல் தடவையிலே மனம் சலித்திருந்தால் வெற்றி என்ற பேறை அடைந்திருக்க மாட்டான். அன்று கிறிஸ்து ஒரே ஒரு உருவமுள்ள சிலுவையைத் தான் சுமந்தார். ஆனால் இன்று நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையிலே பல உருவமற்ற சிலுவைகளைச் சுமக்க வேண்டியவர்களாகின்றோம். குடும்பம், பிள்ளையின் வாழ்க்கை, படிப்பு, பட்டம், பதவி என்று இன்னோரன்ன சொல்லொணாத துயரங்கள் நம் வாழ்க்கையில் எழுகின்றன. இவ்வாறு எழும் துயரத்துக்கு ஈடுகொடுத்து நின்று சமாளிக்க இறைபலத்தையும் விசுவாசத்தையும் நம்மில் வளர்த்திட வேண்டும். இவை இல்லாதவர்கள் தான் உயிரை மாய்க்கும் தற்கொலைக்குத் துணிவோர்,

குடும்பத்தில் மாத்திரம் துயரம் என்று நினைப்பது தவறு. எமக்கு அயலிலுள்ளவர்களால் வேண்டாத விதமாக ஏற்படும் துயரம் சகிக்க முடியாததாகத் தோற்றமளிக்கும். அவர்களால் நமக்கு ஏற்படும் அவப்பெயர், வீடு வீடாகச் சென்று நம்மைப்பற்றிக் கூறும் பொய்கள், வீண் குற்றச்சாட்டுக்கள் ஆவலாதிகள், அவதூறுகள், எம்முடைய கண்ணெதிரே எமக்கு எதிராக அவர்கள் செய்யும் செயல்கள் இவை எல்லாம் எம்மை அளவுக்கு மீறி வேதனைப் படுத்தும் செயல்கள் தான். இவற்றை இல்லை என்று மறுப்பதற்கில்லை. அதற்காக அவர்களைப் போன்று நாமும் நடக்க முனைந்தால் இரு பகுதியினருமே வேறுபாடற்றவர்களாகி விடுவோம். இவ்விடத்தில் மிக மிகப் பொறுமை சாலிகளாக நாம் நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நாம் வாழ்வதும், வாழ்ந்து கொண்டிருப்பதும் வாழ்க்கையைக் கெடுக்கும் கபடுள்ளவர்கள் மத்தியில். ஆகவே இவர்களிடமிருந்து நாமும் காப்பாற்றப்படுவதோடு அவர்களையும் மனந்திருந்துவோராக்க இவர்களால் எமக்கு ஏற்படும் துயரைப் பொறுமையோடு நாம் ஏற்க வேண்டும்,

மனிதர் ஒவ்வொருவரும் மனிதப் பலவீனத்திற்கு அடிமைப் பட்டவர்கள்தான். இந்தப் பலவீனம் எம்மிடையே கிளர்ந்தெழுவதும் இயல்பு. நான் நேர்மையாக நடந்தும் என்மேல் வீண் பழி சுமத்துகின்றார்களே? இறைவா! ஏன் என்னை இந் நிலைக்கு ஆளாக்கினீர் என்று உள்ளமும் குமுறுகின்றது. ஆனால் நம் உள்ளத்தை, இதயத்தைப் பயிற்சி மூலம் எதையும் ஏற்றுக் கொள்ளும் தன்மைக்கு மாற்றியமைத்தால் அது கூடத் துயரத்தால் கிடைத்த பேறு தான். துயரங்கள் உங்களை அணுகும் போது இறைவா இவற்றை உம்மிடமே ஒப்படைக்கின்றேன். என்னை வழி நடத்தும் என்று வேண்டுங்கள். அனைத்தும் துரும்பு போல் தோற்றமளிக்கும். பொய்யைக் கண்டு உள்ளம் குமுறினால் உங்களுக்குள்ளேயே சொல்லுங்கள். ஆன்றோர் வாக்கான இப்பழமொழியை "உண்மை சொல்லிக் கெட்டாருமில்லை. பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை" என்று.

மனித மதிப்பீட்டின் அடிப்படையில் துயரினை நோக்கினால் அது என்றுமே துயரம் தான். அன்றாட வாழ்க்கையில் சில வேளைகளில் கிறிஸ்தவ மதிப்பீட்டிற்கு ஏற்பவும் வாழ வேண்டியவர்களாகின்றோம். அந்த நேரங்களில்

(தொடர்ச்சி [illegible]ஆம் பக்கம்)

## துணிவுடன் ஏற்போம்

இன்பம் எங்கே இன்பம் எங்கே — மானிடா
இதுதான் இதயத்தின் இன்னிசையா?
இன்ப விளையாட்டிடை மேலெழுந்து குதிப்பாய்.
எனக்கு நிகர் யார் என்பாய்
இருகணத்தில் துன்பம் வரின்
இதயமே இருண்டிடத் தவிப்பாய்.
இன்றே சிந்தி, துயர் உறுவோர் பேறுபெற்றோர்.

உள்ளத்தைப் புடம் போட்டுத் தூயதாக்கும்.
நான் என்னும் ஆணவத்தை அடக்கிவிடும்.
அன்பு பாசம் கருணையை வளர்த்திடும்
ஆங்காரம் கோபத்தை அப்பாலே துரத்திடும்
இதயத்தில் இறையன்பை இருத்தியே நிற்கும்
ஈடிணையற்ற இதயத்தின் துயரங்கள்
உள்ளத்தின் தூய்மையால் ஓடியே மறைந்திடும்.

ஊழியக் காரனாய் உண்மையில் வாழ்ந்திட
எதற்கும் பொறுமையின் ஏணியில் ஏற்றிடும்
யேசுவின் அன்பினில் எம்மையும் இணைத்திடும்
வறுமையின் கொடுமையை மறக்கவே செய்திடும்
சிறியோர் யாம் இயேசுவில் இரண்டறக் கலந்திடச்
சிற்பியாய் எம்மைச் செதுக்கிடும் துயரங்கள்.
இத்தனை பேறுகள் பெற்றிடும் துயரத்தைத்
துரும்பென மதித்துத் துணிவுடன் ஏற்போம்.

—மலர்—

## துயர நிமிடங்கள் வாழ்க்கையின் பேறுகள்

ஒரு தாய் தன் குழந்தையைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்கிறாள். அவர்களது கிராமத்திலிருந்து வெகு தொலைவிலிருந்த அப்பாடசாலையை அவர்கள் அடைந்த போது சூரியன் உதித்துவிட்டிருந்தது. பிள்ளை காலைச் சூரியனில் தனது இராட்சத நிழலைப்பார்த்துக் குதூகலித்தது. இதை அவதானித்த தாய் சொன்னாள்: "மகனே, காலை நேரச்சூரியனில் உன்நிழலைப் பார்க்காதே, மதிய நேரச் சூரியனில் அதைப்பார்." (மதிய நேரச் சூரியவொளியில் ஒருவனின் நிழல் அவனை விடச் சிறுத்திருக்கும்.)

நம் நிழலைப்போல் நாம் சிறுத்துப்போகும் சந்தர்ப்பங்கள் தான் துயரநேரங்கள். "இந்தத் துயரநிமிடங்கள் நம் வாழ்க்கையின் பேறுகள்' என பொருள்பட இயேசு மலைப் பொழிவில் "துயருறுவோர் பேறுபெற்றோர்" என்றார்.

துயரப்படுபவனுக்கு இறையருள் நெருங்கி வருகிறது என்பதால் மட்டும் இந்த வரிகளை அவர் கூறியிருக்க மாட்டார். துயரப்படுபவனுக்கு வானகத்தில் கைம்மாறு கிடைக்கும் என்பதால் மட்டுமே அவர் இதைக் கூறவில்லை. துயரப் படுபவனுக்கு இந்த உலக நாட்களிலும் மற்றவனை விட விசேட கொடைகள் கிடைக்கின்றன என்பதாலும் தான் இயேசு அப்படிக் கூறினார். ஏனெனில், கிறிஸ்தவம் உலக வாழ்க்கையை மதிக்கின்ற ஒரு மதம். கிறிஸ்தவமே ஒரு வாழ்க்கைமுறைதான்.

துயரம் என்ன என்பதை மனோதத்துவ அடிப்படையில் பார்க்கலாம். ஒரே வாக்கியத்தில் சொல்வதானால் அது "தெளிவின் ஆரம்பம்." தொடர்ச்சியாக மனக்கவலையில் மூழ்கியிருக்கும் ஒருவர், மேலும் மேலும் பிரச்சினைகளால் அமுக்கப்பட்டுத் தன் கவலையின் உச்சக்கட்டத்தை அடைந்த பின்னர் அவரது கவலைகள் கொஞ்சம் குறைய ஆரம்பிக்கின்றன. தெளிவு மனதில் பரவ ஆரம்பிக்கின்றது.

---

யோ. மிஷேல்

---

இது மனோதத்துவவியலாளர்கள் உறுதி செய்துள்ள ஆனால் விளக்க முடியாத உண்மை. தொடர்ந்த துயரங்களால் மனம் மரத்துப்போகும் அல்லது மென்மையாகும். இரண்டில் எது நிகழ்ந்தாலும் அது உலகத்திற்கு நல்லது. மனம் மரத்துப் போனவன் மேலும் மகிழ்ச்சி, கவலை என்ற மேல் மன அலையடிப்புக்களால் சலனிப்பதில்லை. மனம் மென்மை பெற்றவன் உலகத்தின் மட்டில் பேரன்புகொள்ள முடிகிறது. இது துயரத்தின் நன்மை. துயரத்தினால் ஒருவன் அன்பு கொண்டவனாய் ஆக்கப்பட முடிந்தால் அவன் பேறுபெற்றவனே.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| 9 | எம் விழிகளின் ஒளி யேசு |
| 14 | எம் வாழ்வின் வழி யேசு |

*அன்பின் கண்மணிகாள் !*

எம் மீட்பராம் யேசுவின் வல்ல கரம் இத்துன்பவேளையில் எங்களைக் காத்து வழிநடத்த எம்மை அவரிடம் கொடுப்போம். "தற்பெருமை தந்த வினை" என்ற குட்டிக்கதையை கண்மணி ம. பி. நிரோஷன் தருகிறார். படியுங்கள். நன்றி. நிரோஷன் தற்பெருமை மட்டுமா! இருவரும் மடியக்காரணம்.

நம்பிக்கையற்ற, அன்பில்லா நட்பும் அழிவுக்குக் காரணமாகும். ஆபத்தில் உதவும் கரம்தான் உண்மையான நட்புக் கரம். அக்கரங்களாக எங்கள் கரங்கள் மாற யேசுவின் அன்புக் கரத்தை இறுகப்பற்றுவோம்.

அன்பின், அன்பு விழி,

## குட்டிக்கதை — தற்பெருமை தந்த வினை

அலெக்சும் அனோஷனும் இணைபிரியாதவர்கள். இருவரும் ஒருமுறை காட்டுவழியாகச் சென்றுகொண்டிருக்கையில் எதிர்பாராத விதமாக யானைக்காகத் தோண்டப்பட்ட பள்ளத்தினுள் வீழ்ந்துவிட்டனர்.

ஒருவர் மற்றவரைத் தூக்கிவிட்டால் இருவரும் வெளியே வந்துவிடலாம்.

இது இருவருக்கும் நன்கு தெரியும்!

"அனோஷனைத் தூக்கிவிடுவோமா?" என அலெக்சின் மனம் ஒருகணம் எண்ணிற்று. ஆயினும் தற்பெருமை அதை மறைத்தது. "இவன் எனக்கு உதவிசெய்யாமல் நான் இவனிற்கு உதவுவதா?" என அனோ அதைத் தட்டிக்கழித்தான்.

"நீ என்னைத் தூக்கிவிட்டியெண்டா நான் உன்னையும் வெளியில எடுத்திடுவன்" என்றான் அலெக்ஸ். அதற்கு அனோ "ஏன் நீ என்னத் தூக்கிவிட்டியெண்டா நானும் உன்ன வெளியில எடுப்பன்தானே" என்றான். நேரம் போயிற்று; தொம். தொம் என்ற சப்தங்கள்–பின்பு ஒரு பெரிய பிளிறல். இருவரும் நடுங்கினர். இதயம் பக் பக் என அடித்தது. அவ்வேளை பெரிய யானை யொன்று அவர்களிருந்த குழியினுள் விழுந்தது. சத்தமின்றி இருவரும் அந்த இடத்திலேயே சமாதியாயினர்.

இந்தநிலை தேவைதானா? தற்பெருமை இல்லாதிருந்தால் இருவரும் தப்பியிருக்கலாமல்லவா? இனியாவது தற்பெருமை, நீக்கி; உதவியை எதிர்பாராமல்–உதவி செய்து வாழ்வோம்! சரிதானே?

ம. பி. நிரோஷன்
S. P. C. ஆண்டு IIB

## எளிமையின் தளிர்கள்

வாழ்வின்
வருவாய்க்காய்
கருவாடாய் காயும்
உருவங்களையும்
வான மேகங்கள்
வார்ப்பால்
கரைந்து இடியும்
குடிலின் இவர்களையும்
பானை ஏற்றி
கஞ்சி குடித்து
பற்றாத வயிற்றால்
வற்றாத கண்ணீரில்
வாழும் அவர்களையும்
பூமி புறந்தள்ளுவது.
புதிய சரித்திரமல்ல
அழுக்கு ஆடையுடன் ஓர்...
அடே!
அங்கே நில்...!
ஐயா அமருங்கள்
அது அழகாய் உடுத்திய...
இது விவிலிய விரல்கள் சுட்டும்
விளக்கமான சாட்சிகள்
வறுமையின் 'வசந்தத்திற்கு"
பின்னர் பொழுது
விடிந்தது ...
வறுமையின் நிறங்கள்
மாறாத மனிதத்திற்கும் ...
ஆம்!
பொழுது விடிந்தது ...
பௌர்ணமியை
அடைய முடியாத
நிலாக்களான
சிலருக்கும் தான்
விடிந்தது
பொழுது ...!
"எளிய மனத்தோர்
பேறுபெற்றோர்..."
இதோ ...!
ஏழ்மைக்கு
அதிஷ்டலாபம்
கிடைத்தது ...!
நாட்டில் அங்கீகாரமும்
அளிக்கப்பட்டது.
அங்கோர்
அரியாசனமும்
கிடைக்கும் எனப்பட்டது.
இதனால்
குனிந்த தலைகள்
நிமிரத் தொடங்கின.
எளிமையின் தளிர்கள்
கனிநடனமாடின.
ஏனெனில்
விண்ணரசு
அவர்களதே...!

● எஸ். ஏ. அருட்செல்வன்

திருத்தந்தையின் ★ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும்-20

### போலாந்து நாடு கம்மியூனிச நாடு-அங்கு 90% மக்கள் கத்தோலிக்கர்.

ஏறக்குறைய 4 கோடி மக்கள் வாழும் போலாந்தில் 90% மக்கள் கத்தோலிக்கர் என்பதும் ஏறக்குறைய 1000 ஆண்டு கால வாழ்வில் கிறிஸ்தவம் அவர்கள் இரத்தத்தில் கலந்து விட்டதென்பதும், அரசு இவர்களைப் பகைத்து பெரிதாக ஒன்றும் செய்யமுடியாது என்பதும் அறிய வேண்டிய உண்மையாகும்.

தன் இரத்தத்தால் கிறிஸ்துவிற்குச் சான்று பகர்ந்த புனித ஸ்ரஸ்லோஸ்சின் 9ஆம் நூற்றாண்டை ஒட்டி போலாந்து மக்களுக்குத் திருத்தந்தை சுற்றறிக்கை அனுப்பியபின் அவருக்கு அழைப்பு விடுப்பது அரசின் கௌரவப் பிரச்சினையை மேலும் பெரிதாக்கியது.

வேதசாட்சியான ஸ்ரனிஸ்லாஸ் மக்களுக்காக வாழ்ந்தவர். போலாந்தில் கிறிஸ்தவம் வாழத் தன்னுயிரை ஈந்தவர். அயலானைப் பற்றி அக்கறை கொள்ளாத-ஆட்சி-இவ்வுலகில் நீடிப்பதேபாவம், போலாந்தில் நிலவும் ஆணவம், அக்கிரமம், அநீதி ஆகியவற்றை ஒழிக்க அனைவரும் ஒன்று திரள வேண்டும்–இதுதான் அவர் அனுப்பிய சுற்றறிக்கை.

அரசைத் தாக்கும் இவ் அறிக்கையை கோவில்களில் வாசிக்கப்படாமல் தடுக்க அரசு எவ்வளவோ முயன்றது. முடியவில்லை. இவ்வறிக்கையே இவ்வளவு தாக்கமானதாயிருந்தால் அவரின் வருகை எவ்வளவு தாக்கத்தைத் தருமோ என அரசு அஞ்சியது.

எப்படி இருப்பினும் வேண்டா வெறுப்புடன் அழைப்பு விடுத்தது. பாப்பரசர் 1979 ஆம் ஆண்டு யூன் 2ஆம் நாள் போலாந்து நோக்கிப் பயணமானார்.

போலாந்து 30 ஆண்டுகளாக கம்யூனிசம் பேசிவரும் இரும்புத்திரை போட்ட நாடு. பொது உடைமைக் கொள்கைகளும், திருச்சபைக் கோட்பாடுகளும் ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்கும் நாடு. இருந்தாலும் பல போராட்டங்கள் மத்தியிலும் 90% மக்கள் கத்தோலிக்க திருச்சபையில் உறுதியாக நிற்கும் நாடு.

"நான் இந்த மண்ணின் மைந்தனாக இந்த நாட்டின் மகனாக, இராயப்பரின் வழித்தோன்றலாக உங்களிடையே வருகிறேன்" மகிழ்ச்சிபொங்க, உணர்ச்சி மடைதிறந்து ஓட அனைவரும் மகிழ்ச்சிக்கடலில் மூழ்க தன் வார்த்தைகளை கொட்டத் தொடங்கினார்.

குழந்தையாய், இளைஞனாய், குருவாய், ஆயனாய், கருதினாலாய் — இருந்து வளர்ந்து பணிபுரிந்த சொந்த மண்ணிற்கு இப்போ தலைமை ஆயனாய், தனிப்பெருந் தலைவனாய் வருகிறார்.

சமயம், கட்சி, வயது, பதவி, அனைத்தையும் கடந்து அனைவரும் திரண்டு வந்திருந்தனர். விமான நிலையத்தில் போலாந்து தலைவரும் மூத்த கருதினால் விசின்ஸ்கியும் அன்போடு வரவேற்றனர்.

அனைத்து மக்களையும் அன்போடு பார்த்து திருச்சபை பற்றி அரசிற்கு உறுதியான வார்த்தைகளைச் சொன்னார். இந்த நேரத்திலும் இப்படி வார்த்தைகள் பேசமுடியுமா என அனைவரும் வியந்தனர்.

(வளரும்)

## சுமக்க முடி...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றவர்களால் நாம் பைத்தியக்காரராக எண்ணப்படுவோம். ஆனால் அது பற்றி நாம் பெரிது படுத்தத்தேவையில்லை. ஒருவன் எனக்கெதிராகக் கத்தியைத் தூக்கும் போது நானும் கோடரி தூக்கினால் அது தவறு. அவன் கத்தியைத் தூக்கினால் அவனைப் பார்த்து நான் ஒரு புன்சிரிப்பை வீசினால் அவன் மனம் மாறி விடுவான். ஆனால் ஏனையோருக்கு நான் பைத்தியக் காரனாவேன். எங்களுடைய துயரங்கள் சுமக்க முடியாத துயரங்களாவது அடுத்தவர்களால் தான். எதிரிகளிருவர் தொடர்ந்தும் எதிரிகளாவதும் ஏனையவர்களால் தான்.

ஆகவே அனைவரும் முயற்சிப்போம். எந்தத் துயரத்தையும் ஏற்கத் துணிவோம். இன்றிலிருந்தே உங்கள் உள்ளங்களைத் தட்டுங்கள். எது வந்தாலும் உன் இடப்பக்கத்தில் ஆயிரம் விழுந்தாலென்ன வலப்பக்கத்தில் பத்தாயிரம் விழுந்தாலென்ன உன் துயரத்தை நீ சுமக்க முடிகிறதா என்று பார். பொறுமையைக்

## திருப்பம்... [நாடகம்]

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வினி : ஐயோ! எல்லோரும் வாங்கோ, சீக்கிரம் போவோம்.

ரொணி : இல்லை வினி, நாங்கள் உன் சுயநலம் பொது நலமாய் மாறவேண்டும் என எண்ணி சுபாவும் நானும் சேர்ந்து ஒரு பொய்சொல்லி விட்டோம். நான் பொய் சொன்னதையிட்டு எனக்கு மனவருத்தம். ஆனாலும் நல்ல காரியத்திற்காக இதைச்செய்வதில் ஆனந்தப் படுகிறேன்.

ஆன் ; பாதர் மிக்க நன்றி, நல்ல காலம் தக்கசமயத்தில் நீங்கள் வந்திராவிடில் நானும் வினியும் பெரிய சண்டை தரன் பிடிச்சிருப்போம். பிறகு சுபாதான் காவல்துறையிடம் போய் இருக்கும்.

[எல்லோரும் சிரித்தல்]

கடைப்பிடி அனைத்தும் இறைவனால் வழி நடாத்தப்படும், ஆறுதலடைவாய்.

துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.

## 2000 யூபிலி ...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஒன்றாகும், நாசிஸம், கம்யூனிஸம் என்னும் கிறிஸ்தவமறைக்கு விரோதமான அமைப்புகள் ஐரோப்பாவில் வீழ்ச்சியடைந்த பின்னர், ஐரோப்பிய மக்களுக்கு மீண்டும் இவ்விடுதலைச் செய்தியைக் கொண்டு வருவது அவசர தேவையாகின்றது. மேலும்மீட்பரின் பணி என்னும் சுற்றுமடல் கூறுவதுபோல் இன்றைய உலகு, புனித சின்னப்பர்போதித்தஅதென்ஸ் நகரின் அரயோபாகு மன்றத்தின் நிலையைப் பிரதிபலிக்கின்றது. இன்று பல்வேறுபட்ட பல அரயோபாகுகள் உள்ளன. இன்றைய நாகரிகம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம் என்னும் பெரும் துறைகளே இவை. மேற்கத்திய உலகு எவ்வளவிற்கு அதன் கிறிஸ்தவ அடித்தளத்திலிருந்து விலகிக்கொண்டு போகிறதோ அவ்வளவுக்கு அது மறைபோதக பிரதேசமாக மாறுகின்றது. பல்வேறு அரயோபாகு அமைப்புகளால் [illegible] (வளரும்)

## தென்னிந்திய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருச்சபையின் யாழ் மறைமாவட்ட ஆயர் சுப்பிரமணியம் ஜெபநேசன் கூறினார். மக்கள் அகதிகள் முகாம்கள், கிறிஸ்தவ ஆலயங்கள், இந்து மதக் கோவில்கள், பள்ளிகள் ஆகியவற்றில் நிலைகொண்டுள்ளதென்றும், சில முகாம்களில் இடம் இல்லையென்ற செய்தி வெளியில் ஒட்டப்பட்டிருப்பதென்றும் குரு அண்ணப்பா ஜெயக்குமார் கூறினார்.

## ஆழ்ந்த கவலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பத்தினருக்கும், மற்றும் இன்னலுறும் யாழ் மக்களுக்கும் தனது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்து திருமலை–மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை யாழ் ஆயருக்கு கடிதம் வரைந்துள்ளார்.

இவ்வாறு வத்திக்கான் வானொலி கடந்த சனியன்று (15-07-95) ஒலிபரப்பிய செய்தியில் கூறியது.

## துயர நிமிட...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

தத்துவ ரீதியில் துயரம் ஒரு அனுபவம். அல்பேர்ட் சுவீட்ஸர் சொல்வது போல்; "உன் பாதையில் செத்துக்கிடக்கும் சிறு பூச்சியைப் பார்ப்பது போல், கரைந்துகொண்டிருக்கும் பனியைப்பார்ப்பதுபோல். உன் துயரமும் உன் வாழ்வின் காட்சி; அனுபவம்." துயரம் துரத்தும் போது உலகின், வாழ்வின் எல்லைவரை ஓடி எட்டிப்பார்த்து வருகிறபோது கிடைக்கும் அனுபவம், துயரத்திலிருந்து விடுதலை பெற வழி காட்டித்தரும். அனுபவம் என்பது தேடல். எனவே துயரம் தேடல் தருகிறது. தேடல் என்பது வாழ்க்கையின் தொடர்ந்த கல்வி, எனவே, துயரம் கல்வி.

அடிக்கடி துயர அலைகளை எம்மை நோக்கி அனுப்பிவைக்கிறது தெய்வம்–நாம் தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக. இந்த சந்தர்ப்பங்களை அழுது கொண்டும் நொந்து கொண்டும் கழிப்பது அறியாமை. அமைதியாகவும். கற்றுக்கொள்ளும் நோக்கோடும் கழிப்பது அறிவுடைமை. துயருறுவோர் பேறுபெற்றோர் என்பது இங்கே தான் உயிர் பெறுகிறது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ் ஆயர் திருநிலைப்படுத்தல் தினம் 30—07—1995



பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னர் 30-7-1981 இல் மடுத்திருப்பதியில் ஆயனாகத் திருநிலைப்படுத்தப்பட்ட எங்கள் யாழ் ஆயர் மேதகு இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கு இத்தனை காலமாக இறைவன் வழங்கிய அருள்வளங்களுக்காக நன்றி கூறுகிறோம்.

இறைவன் மென்மேலும் தமது அருள் வளங்களால் எங்கள் ஆயர் அவர்களை நிரப்பி எங்கள் யாழ். மறை மாநிலத்தை நல்லாட்சி புரிய கருணைகூருமாறு வேண்டுவோம்.

# இளைப்பாறிய யாழ் ஆயர் பெயர்கொண்ட புனிதர் தினம் 25—07—1995



கிறிஸ்துநாதரின் அப்போஸ்தலரில் முதன்மை பெற்று விளங்கிய மூவரில் ஒருவரும், முதல் அப்போஸ்தலவேதசாட்சியுமாகிய புனித பெரிய யாகப்பரின் திருநாமந் தாங்கியவரான எங்கள் யாழ் மறைமாவட்டத்தில் ஓய்வுபெறும் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கு இறைவன் வழங்கிய அருள் வளங்களுக்காக நன்றி கூறுகிறோம்.

எங்கள் நன்றிக்குரிய ஆயர் அவர்கள் நற்சுக பலத்துடன் நீடுவாழ்ந்து மக்களுக்கு மேலும் நலன் புரிய வேண்டிய அருள்களை அன்னாருக்கு இறைவன் பொழியவேண்டுமென வேண்டுவோமாக!

## கொடூர குண்டு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களிடமிருந்து தங்களை விடுவிப்பதற்காக, தங்கள் சொந்த வீடுகள், சொத்துக்கள் யாவற்றையும் துறந்து ஞாயிறு காலை தொட்டு இடம் பெயர்ந்த மூன்று இலட்சம் மக்கள், எறிகணை, குண்டு வீச்சுத் தாக்குதல் மத்தியிலும் வீதிகளுடாக நகர்ந்த காட்சி மக்கள் தங்களின் உடமைகளை அல்ல, உரிமைகளைக் காப்பாற்றக் கொண்ட மனவுறுதியைக் காட்டியது.

மறுநாள் (10.07.95) மானிப்பாய், ஆனைக்கோட்டை, தாவடி, வட்டுக்கோட்டைமுதலிய இடங்களில் இடம்பெற்ற குண்டுவீச்சுக்களினாலும், எறிகணைத்தாக்குதல்களினாலும், 42 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன், 130 பேர் படுகாயமடைந்தனர்.

11-07-95இல் தொல்புரம், சங்கானை, யாழ்ப்பாணம் எனும் இடங்களில் பொது மக்களில் 9பேர் கொல்லப்பட்டனர், 13பேர் காயமடைந்தனர்.

6நாள் நடந்த இந்நடவடிக்கையில் அப்பாவிப் பொதுமக்களில்225க்கும்மேலானோர் கொல்லப்பட்டும், ஏறக்குறைய 500 பேர் படுகாயமடைந்துமுள்ளனர் என கணிக்கப்படுகின்றது.

ஆக்கிரமிக்கப்பட்ட 78 சதுர கிலோ மீற்றர் பரப்பிலுமிருந்து "முன்னோக்கிப் பாய்ச்சல்" நடவடிக்கையில் சடுபட்டிருந்த 15,000 துருப்புக்கள் விடுதலைப்புலிகளால் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வத்திக்கான் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து, 13-07-95 இல் வத்திக்கான் தூதுவருக்கு எழுதிய கடிதத்தின் சில பகுதிகள் பின்வருமாறு.

இராணுவம் முன்னேறி வரும்பொழுது பொதுமக்கள் மீது நடாத்திய மிகப் பெரிய அளவிலான எறிகணைத் தாக்குதல்களால் வலிகாமம் மேற்கு வடக்கிலிருந்து மக்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டு விட்டு வெளியேறினர். மக்களின் இம் மாபெரும் இடப்பெயர்வின்போது, அவர்களில் சிலர், ஏறக்குறைய 2500பேர், நவாலிக் கோயில் வளவில் அடைக்கலம் புகுந்தனர். யூலை 9ஆம் திகதி பிற்பகல் 4-45 மணிக்கு ஒரு புக்காரா விமானம் திடீரெனத்தோன்றி ஆறு (6)க்கு மேற்பட்ட குண்டுகளைப் பொழிந்தது. பெரும் அதிர்வுடன் கட்டிடங்கள் நொருங்க, மக்கள் அக்கணத்திலேயே கொல்லப்பட்டனர்; அநேகர் காயமடைந்துள்ளனர். இறந்தவர்களின் எண்ணிக்கை 120ஐயும் தாண்டிவிட்டது. இன்னும் சிலர் இனங்காணப்படவில்லை. இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி புரிந்த தொண்டர் பலர் இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

பெண்கள், குழந்தைகள் உட்பட ஏறக்குறைய 220 பொது மக்கள் இந்த "முன்னோக்கிப் பாய்ச்சல்" எனும் இராணுவ நடவடிக்கையில் பலியாகியுள்ளனர். இப்படி இது தொடருமாயின் யாழ்ப்பாண மக்கள் பயங்கர பேரிடரை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

யாழ் நகர் இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிகின்றது. குடாநாட்டில் 63 பெரியதும், சிறியதுமான முகாம்களில் இவர்கள் பராமரிக்கப்படுகின்றனர். உணவு, சுகாதாரம், மருத்துவம் போன்ற வசதிகள் மிகவும் வருந்தத்தக்க நிலையிலுள்ளன.

எனவே, பொதுமக்களுக்கு சொல்லொணாத் துன்பத்தை உண்டுபண்ணும் இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதில் எதுவித பயனுமில்லை. சமாதான நோக்கை முன்னெடுக்க இது உதவமாட்டாது. பொது மக்கள்மீதும், பாகுபாடற்ற இலக்குகள் மீதும் மேற்கொள்ளும் விமானக் குண்டு வீச்சுகளும் ஏவுகணை எறிகணைத் தாக்குதல்களும் எவ்விதப்பட்டும் நிறுத்தப்பட வேண்டும். இந்தப் பெரும் ஆபத்து வேளையில் மக்களின் பாதுகாப்பிற்காக உங்கள் செபங்களை தாழ்மையுடன் வேண்டி நிற்கிறோம்,

## யாழ் ஆயர்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படி மேற் குறிப்பிட்ட கோயிலில் கூடியிருந்த அப்பாவி பொது மக்களான அகதிகளின் பரிதாபமான கொலை பற்றி அறிவிப்பதில் நான் மிகவும் கவலையடைகிறேன். கோயிலில் புகலிடமடைந்த இந்த அகதிக் கும்பல் மேல் புக்காரா ஆகாய விமானம் ஒன்று பொழிந்த ஒரு தொகுதிக் குண்டுகள் பலவற்றால் பெண்கள் குழந்தைகள் உட்பட 65 பொது மக்கள் சாவு எய்தியதுடன்150க்கு மேலானோர் ஊனமுற்று படுகாயங்களுக்குள்ளாயினர். மேலும் வீடுகள் பல தரை மட்டமாக்கப்பட்டதாலும், மற்றும் சில, எமது கோயிலும் குருமனையும் உட்பட அதிக சேதத்திற்குள்ளானதாலும் நூற்றுக் கணக்கானோர் இல்லிடமற்றவர்களாக்கப் பட்டுள்ளனர். இவ்வூர் மக்கள் அனைவரும் அகதிகளாக பாதுகாப்பான இடங்களுக்குத் தப்பியோடி விட்டனர்.

எனவே, கோயில்கள், ஆலயங்கள், பாடசாலைகள், மருத்துவ மனைகள் போன்ற பொது மக்கள் இலக்குகள் மேல் குண்டுகள் பொழிவதையும் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்வதையும் தவிர்க்க வேண்டுமென உங்கள் படையினருக்கு அறிவுறுத்தல் கொடுக்குமாறு மேன்மை தங்கிய தங்களை மிக வினயமாக வேண்டுகிறேன்.

## இலங்கை . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருத்தத்தைத் தெரிவித்ததுடன், சிறிலங்கா ஜனாதிபதியால் விசாரணைக் குழு நியமிக்கும் வாக்குறுதியை வரவேற்று, அதன் செயற்பாட்டை உன்னிப்பாக கவனிக்கப்போவதாக ஆயர் பேரவை சார்பில் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## கத். குருமார் . . .


(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிர்ப்பந்திக்கவும், தமிழ் மக்களை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கவும் என சிறிலங்கா அரசாங்கம் எதிர்நோக்கிய குறிக்கோள்களை விட, எதிர்மாறான விளைவுகளைமாத்திரம் உண்டுபண்ணியுள்ளதென ஏகமனதாகஏற்றுக் கொண்டனர். எனவே இராணுவ நடவடிக்கையூடாக சமாதானத்தை அடையும் நோக்கத்தை கைவிட்டு, அரசியல் பேச்சுவார்த்தைகள்தொடங்குமாறு, யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், யாழ் மறை மாவட்ட குருக்கள் ஒன்றியத்தின் தலைவர் அருள்திரு J.B. ஞானப்பிரகாசம், நீதி, சமாதான ஆணைக்குழுத் தலைவர் அருள்திரு C. G. ஜெயக்குமார் ஆகிய மூவரும் கைச்சாத்திட்டு சிறிலங்கா ஜனாதிபதிக்கு ஐந்து அம்சங்கள் அடங்கிய மகஜர் ஒன்று அனுப்பியுள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் இராணுவ நடவடிக்கை தொடங்கிய பின் அறிவிக்கப்பட்டதையும்; கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்கள் குண்டு வீச்சுகளினால் 220 பொதுமக்கள் கொல்லப்பட்டதையும்; 375 பொதுமக்கள் பலத்த காயங் களுக்குள்ளானதையும்; நவாலி ஆலயத்தில் ஒரேகணத்தில் நடந்த படுகொலைக்களரியையும்; யாழ் போதனாமருத்துவ மனையில் மருந்து பற்றாக் குறையையும்; ஏறக்குறைய 300,000 இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவு இருப்பிட வசதியின்மையையும் இம் மகஜரில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

மேலும், கண்மூடித்தனமான எறிகணைக் குண்டுத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறும்; மருந்து வகைகளை அனுப்புமாறும்; இடம் பெயர்ந்தோர் தங்குவதற்கு இடவசதி, உணவு, உடை வழங்குமாறும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

## மயான அமைதிக்கான போர்?



மண்ணில் விதைத்த மழலைகள்

# தாயகத்தை தரிசிக்கும் J. கமிலஸ் நிமலன் அடிகளார்

வத்திக்கான் மறைஅறிவிப்பு பேராலயத்தில் பணி புரியும் யாழ். மறைமாவட்டக்குருவான அருள்கலாநிதி. J. கமிலஸ் நிமலன் விடுமுறைக்காக யாழ். மறைமாவட்டம் வந்துள்ளார்.

புதிய பணியை பொறுப்பேற்ற பின் முதல் தடவையாக தாயகம் வந்துள்ள அடிகளார் யாழ். ஆயர், குருக்கள் பொதுநிலையினரைச்சந்தித்து, போரின் விளைவால் ஏற்பட்ட அனர்த்தங்களையும் பார்வையிட்டார்.

வத்திக்கான் பேராயத்தில் சிங்கப்பூர், மலேசியா, புருணை, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள மறை மாவட்டங்களுக்குப் பொறுப்பாகவும், ஆசிய ஆயர் பேரவைக்கான வத்திக்கான், பேராயத்தின் உதவியாளராகவும், அருள்கலாநிதி J. கமிலஸ் நிமலன் தற்போது பணியாற்றி வருகிறார்.

இவர் கடந்த ஒரு வருடமாக இப் பொறுப்பை ஏற்றுப் பணியாற்றமுன் திருச்சிலுவை சபையினரால் நடத்தப்படும் "அத்தனேயே றோமானோ" என்னும் றோமாபுரியின் கல்விக்கலைக் கழகத்தில் நாலு வருட (90-94) இறையியல் கலாநிதிப் பட்டப் படிப்பை மேற்கொண்டு மிகத்திறமையாகச்சித்தி எய்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில்1995 ஆம் ஆண்டு யூலை மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.